செ.வெ.எண் : 19 / ஜூன் நாள் : 09.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.322.87 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் இன்று (09.06.2017) மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சியில் உள்ள திருப்பாலைக்குடி கிராமத்திற்கு நேரடியாக வருகை தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், அக்கிராமத்தில் ஒருங்கிணைந்த பள்ளிகள் சீரமைப்புதிட்டத்தின் கீழ் ரூ.11.80 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் பள்ளி கட்டடத்தின் கட்டுமானப் பணிகளின் தரம் குறித்து ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் ரூ.8.70 இலட்சம் மதிப்பில் தல்லாக்குளம் ஊரணி தூர்வாறப்பட்டு வரும் பணிகளையும் ஆய்வு செய்தார்.

பின்பு காவனூரில் பாரத பிரதமரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.287.37 இலட்சம் மதிப்பில் சேதுரஸ்தா முதல் நாகனேந்தல் வரை சாலை அமைக்கும் பணிகளை ஆய்வு செய்தார். சாலைப் பணிகளை தரமான முறையில் விரைவாக மேற்கொண்டு நிறைவேற்றிட வேண்டும் என அலுவலர்களிடத்தில் அறிவுறுத்தினார். அதன்பின்பு கடலூர் கிராமத்தில் திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பில் உப்பூரில் உள்ள வெயில்காத்த விநாயகர் கோவிலில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டு வரும் பணிகளையும் நேரில் சென்று ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பின்னர் கடலூர் கண்மாயில் மண் அள்ளுவதற்காக முன் அனுமதி பெற்ற பயனாளிகள் மூலம் தூர் வாரி மண் அள்ளும் பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது ஆர்.எஸ்.மங்களம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பச்சமால், திரு.சோமசுந்தரம், ஊரக வளர்ச்சி முகமை செயற் பொறியாளர் திருமதி.சங்கரஜோதி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**